# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்),**
**தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590**

**ஆணை நாள்: 04.11.2020**

**முன்னிலை**

**திரு. ச. த. தமிழ்குமார், பி.ஏ., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

...............

**வழக்கு எண்.SA3795/F/2020**

**திரு சு.வீரமணிகண்டன் ... மேல்முறையீட்டாளர்**

**/ எதிர் /**

**பொதுத் தகவல் அலுவலர்/ கிளை மேலாளர்,**
**தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்**
**(கும்பகோணம்) லிமிடெட்,**
**திருமயம் சாலை, புதுக்கோட்டை மண்டலம்,**
**புதுக்கோட்டை மாவட்டம் - 622 001. ... பொது அதிகார அமைப்பு**

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | **09.01.2020** |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | **28.02.2020** |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | **29.04.2020** |

******

**ஆணை**

இவ்வழக்கு தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை செய்ய இயலாத காரணத்தால் இன்று (04.11.2020) தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மேல்முறையீட்டாளர் திரு சு.வீரமணிகண்டன் மற்றும் பொதுத் தகவல் அலுவலர்/ கிளை மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், திருமயம் சாலை, புதுக்கேட்டை மண்டலம், புதுக்கோட்டை மாவட்டம் ஆகியோர் பங்கேற்றனர்.

2. மேல்முறையீட்டாளர் **09.01.2020** தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், த.அ.போ.க/கும்ப/புது/டிஸ்/டி1/0017-0078/79 எண்

கொண்ட இறுதி உத்தரவுக்கு அனுமதி யாரிடம் வாங்க வேண்டும் என்ற தகவல். தன்னை பணி நீக்கம் செய்ய அனுமதி வாங்கிய நாள் மற்றும் தன்னை பணி நீக்கம் செய்த அதிகாரியின் பெயர் மற்றும் முகவரி விபரம், 22/04/2013-தேதியின்று TN.55.N.801-என்ற பேருந்து எந்த கிளையில் இருந்தது அதன் பெர்மிட் புத்தக நகல், மேற்கண்ட தேதியில் TN.55.N.801 பேருந்தை சோதனை செய்த அதிகாரி பெயர் மற்றும் முகவரி மற்றும் 22.04.2013 அன்று தங்களிடம் தாக்கல் செய்த குற்றச்சாட்டு நகல் மற்றும் மூலஸ்தல அறிக்கை (Basic Report) விபரம், 08.11.2014-தேதியன்று TN.55.N.0767-பேருந்தில் பணியில் கையாடல் புகார் தெரிவித்து பயணிகள் பெயர் மற்றும் முகவரி இந்த வழக்கை விசாரித்த அதிகாரியின் முகவரி 08.11.2014-அன்று TN.55.N.0767-பேருந்தை சோதனை செய்த அதிகாரியின் முகவரி, 19.01.2015-தேதியின்று TN.55.N.0654 பேருந்தில் பணியில் குறைவு தொகை ஏற்படுத்தியதற்காக ரூபாய். 200/- தண்டத்தொகையாக பிடித்தம் செய்யப்பட்டதற்கு உண்டான இன்வாய்ஸ் நகல் மற்றும் மூலஸ்தல அறிக்கை (Basic Report) நகல் தொடர்புடைய தகவல்களை 11 இனங்களில் வழங்கக்கேட்டு பொதுத் தகவல் அலுவலர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், திருமயம் சாலை, புதுக்கோட்டை மண்டலம், புதுக்கோட்டை என விலாசமிட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. மேல்முறையீட்டாளரின் மனு தகவல் பெறும் உரிமைச் சட்ட பிரிவு 6(3)-ன் கீழ் 18.01.2020 தேதியிட்டு உரிய பொதுத் தகவல் அலுவலரான பொதுத் தகவல் அலுவலர்/ உதவி மேலாளர் (பணியாளர் & சட்டம்) புதுக்கோட்டை மண்டலம், மற்றும் துணை மேலாளர் (வணிகம்) புதுக்கோட்டை மண்டலம் ஆகியோர்களுக்கு மாறுதல் செய்யப்பட்டுள்ளது. பொதுத் தகவல் அலுவலர் தகவல் ஏதும் வழங்காததால் மேல்முறையீட்டாளர் 28.02.2020 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர்/ மேலாண்மை இயக்குநர், கூட்டாண்மை அலுவலகம், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், புகைவண்டி நிலைய புதிய சாலை, கும்பகோணம் அவர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலரும் தகவல் வழங்காததால் மேல்முறையீட்டாளர் தான் கோரிய தகவலை வழங்க உத்தரவிடுமாறு கோரி 29.04.2020 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (04.11.2020) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் தொலைபேசி வாயிலாக ஆஜராகி, பொதுத் தகவல் அலுவலர் தனக்கு தகவல் ஏதும் வழங்காததால் தான் கோரிய தகவலை பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து பெற்று வழங்குமாறு ஆணையத்தைக் கேட்டுக்கொண்டார்.

5. இன்றைய விசாரணையில் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மேல்முறையீட்டாளர் 6(1) மனுவில் கோரிய தகவல்களை முழுவதுமாக வழங்குவதாக ஆணையத்தில் தெரிவித்தார்.

6. மேல்முறையீட்டாளரின் மனுவையும், பொதுத் தகவல் அலுவலர் வழங்கிய தகவலையும் இணைத்து பரிசீலனை செய்கையில் மேல்முறையீட்டாளருக்கு சரியான தகவல் வழங்கப்படவில்லை என்பது தெரிகிறது. எனவே, இன்றைய விசாரணையின் முடிவில் ஆணையம் கீழ்கண்ட உத்தரவு பிறப்பிக்கின்றது :-

- மேல்முறையீட்டாளர் 09.01.2020 தேதியிட்டு கோரிய தகவல்களை முழுமையாகவும், விரிவாகவும் **இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி**

அனுப்பிவைத்து, மேல்முறையீட்டாளர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் வழங்கப்பட்ட தகவலின் நகலினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.

- மேல்முறையீட்டாளர் 09.01.2020 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுக்களில் கோரியுள்ள தகவலை வழங்கத் தவறும்பட்சத்தில் பொதுத் தகவல் அலுவலர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 20 (1)-ன்கீழ் நடவடிக்கை எடுக்கப்படுமென்று ஆணையம் எச்சரிக்கின்றது.

ஒம்/- (ச.த. தமிழ்குமார்)
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

<u>வழக்கு எண். SA3795/F/2020</u>

பெறுநர்

**பொதுத் தகவல் அலுவலர்/ கிளை மேலாளர்,**
**தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்**
**(கும்பகோணம்) லிமிடெட்,**
**திருமயம் சாலை, புதுக்கோட்டை மண்டலம்,**
**புதுக்கோட்டை மாவட்டம் - 622 001.**

<u>மனுதாரர்</u>

**திரு சு.வீரமணிகண்டன்,**
**எண்.44/49, காமராஜபுரம் 9-ம் வீதி,**
**புதுக்கோட்டை மாவட்டம் - 622 001.**

Copy to: Judgement File/ Spare.
SM/ PC-17.11.2020